සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

இந்து தர்மாசிரியர் பரீட்சை - 2015 (2017)

Hindu Darmaciriyar Examination - 2015 (2017)

**(01) வேதங்களும் ஆகமங்களும்**

The Vedas and Agamas

**II** ஆம், **III** ஆம் பகுதிகளுக்கான விடைகளை உமக்குத் தரப்படும் **விடைத்தாளில்** எழுதிப் பகுதி **I** இன் விடைத்தாளுடன் இணைத்து மேற்பார்வையாளரிடம் கையளிக்குக.

ஒவ்வொரு பகுதியிலிருந்தும் **இவ்விரண்டு** வினாக்களைத் தெரிவு செய்க.

## பகுதி II

**2.** வேதங்கள் வர்ணிக்கும் தேவர்களில் மேல்வரும் மூன்று தேவர்களின் சிறப்பான தெய்விக அம்சங்களை விபரிக்குக.
   (i) இந்திரன்
   (ii) வருணன்
   (iii) உருத்திரன் (20 புள்ளிகள்)

**3.** இருக்குவேதம் கூறும் விடயங்களின் அடிப்படையில் மேல்வருவன பற்றி பரிசீலிக்குக.
   (i) யக்ஞம்
   (ii) வழிபாட்டு முறை
   (iii) வழிபாட்டின் நோக்கமும் பயனும் (20 புள்ளிகள்)

**4.** "உபநிடத சிந்தனைகளை வளம்படுத்துவதில் குருசீட மரபு பெரிதும் உதவியுள்ளது." இக்கூற்றினை மேல்வரும் தலைப்புக்களில் ஆராய்க.
   (i) உபநிடத குருசீடமரபின் சிறப்பு
   (ii) இம்மரபு வளம்படுத்திய உபநிடத சிந்தனைகள்
   (iii) ஒழுக்கம் பற்றிய அறிவுரைகள் (20 புள்ளிகள்)

**5.** சிவாகமங்களின் காலம் பற்றிக் கூறப்படும் கருத்துகளை ஆராய்க. (20 புள்ளிகள்)

## பகுதி III

**6.** அதர்வ வேதம் கூறும் சமய மரபின் பிரதான அம்சங்களை விளக்கிக் கூறுக. (20 புள்ளிகள்)

**7.** சங்கரரின் அத்வைதக் கோட்பாட்டின் சிறப்பம்சங்களை ஆராய்க. (20 புள்ளிகள்)

**8.** ஆலய வழிபாட்டில் கும்பாபிஷேகக் கிரியைகளின் சிறப்பம்சங்களை விபரிக்குக. (20 புள்ளிகள்)

**9.** மேல்வருவனவற்றுள் எவையேனும் **நான்கு** பற்றிச் சிறுகுறிப்புகள் எழுதுக.
   (i) வேதங்களில் தோத்திர மரபு
   (ii) இந்துசமயக் கிரியைகளில் சங்கல்பம்
   (iii) சைவசித்தாந்தம் கூறும் பதிக்கோட்பாடு
   (iv) பிராமணங்கள்
   (v) விநாயகர் வழிபாடு
   (vi) வேதகால சமுதாயம்

(04 × 5 = 20 புள்ளிகள்)

* * *

සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

இந்து தர்மாசிரியர் பரீட்சை - 2015 (2017)

Hindu Dharmaciriyar Examination - 2015 (2017)

(02) சமய ஞானிகளும் சமயப் பெரியார்களும்

Saints and Leaders of Religious Movements

II ஆம், III ஆம் பகுதிகளுக்கான விடைகளை உமக்குத் தரப்படும் **விடைத்தாளில்** எழுதிப் பகுதி I இன் விடைத்தாளுடன் இணைத்து மேற்பார்வையாளரிடம் கையளிக்குக.

ஒவ்வொரு பகுதியிலிருந்தும் **இவ்விரண்டு** வினாக்களைத் தெரிவு செய்க.

## பகுதி II

**2.** இந்து மக்களின் அறவாழ்வியல் பற்றிய கண்ணோட்டத்தில் இராமாயணத்திற்குரிய இடத்தினை மேல்வரும் தலைப்புகளில் விளக்குக.

(i) நூலாசிரியரும் அதன் அமைப்பும்

(ii) இராமாயணம் கூறும் வாழ்வியல் அறங்கள்

(iii) இராஜ தர்மம்

(iv) இந்துக்களின் மத்தியில் இராமாயணத்தின் செல்வாக்கு (20 புள்ளிகள்)

**3.** இராமானுஜரின் விசிட்டாத்துவைதக் கோட்பாட்டினை மேல்வரும் விடயங்களைக் கருத்திற்கொண்டு ஆராய்க.

(i) இராமானுஜரின் வாழ்வும் பணியும்

(ii) விசிட்டாத்துவைத இறைக் கோட்பாடு

(iii) விசிட்டாத்துவைத ஆன்மக் கோட்பாடு

(iv) பிரபத்தியும் ஆன்ம விடுதலையும் (20 புள்ளிகள்)

**4.** ஆரிய சமாஜத்தின் பணிகளை மேல்வரும் விடயங்களைக் கருத்திற் கொண்டு ஆராய்க.

(i) ஆரிய சமாஜம் பற்றிய அறிமுகம்

(ii) சமயப் பணிகள்

(iii) சமூகப் பணிகள்

(iv) பணிகளின் பலாபலன்கள் (20 புள்ளிகள்)

**5.** சுவாமி சின்மயானந்தர் சின்மயாமிஷன் மூலமாக இந்து சமயத்திற்கும் சமூகத்திற்குமாற்றிய பணிகளை மேல்வரும் விடயங்களின் அடிப்படையில் ஆராய்க.

(i) சுவாமி சின்மயானந்தரின் சுருக்க வரலாறு

(ii) சமயப் பணி

(iii) சமுதாயப் பணி

(iv) இன்றைய காலப் பணி (20 புள்ளிகள்)

## பகுதி III

**6.** "இந்து மதத்தை உலகறியச் செய்த பெருமையுடையவர் சுவாமி விவேகானந்தர்" இக்கூற்றை ஆராய்க. (20 புள்ளிகள்)

**7.** வடநாட்டுப் பக்திநெறியில் ஸ்ரீசைதன்யரின் இடத்தினை எடுத்துக்கூறுக. (20 புள்ளிகள்)

**8.** சுவாமி விபுலானந்தரின் சைவப்பணிகளை விளக்குக. (20 புள்ளிகள்)

**9.** மேல்வரும் சமயாசாரியர்களுள் எவரேனும் **இருவர்** இந்துசமய மேம்பாட்டிற்கு ஆற்றிய பணிகள் பற்றிக் குறிப்புரை எழுதுக.

(i) மீராபாய்

(ii) கபீர்தாஸர்

(iii) நாவலர் (10 × 2 = 20 புள்ளிகள்)

* * *

සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

# இந்து தர்மாசிரியர் பரீட்சை - 2015 (2017)
# Hindu Dharmaciriyar Examination - 2015 (2017)

## (03) சைவசமய வரலாறு
## History of Saivism

II ஆம், III ஆம் பகுதிகளுக்கான விடைகளை உமக்குத் தரப்படும் **விடைத்தாளில்** எழுதிப் **பகுதி I** இன் விடைத்தாளுடன் இணைத்து மேற்பார்வையாளரிடம் கையளிக்குக. ஒவ்வொரு பகுதியிலிருந்தும் **இவ்விரண்டு** வினாக்களைத் தெரிவு செய்க.

### பகுதி II

**2.** சைவ சித்தாந்த சாஸ்திரங்களை அடிப்படையாகக் கொண்டு பதி பற்றி மேல்வரும் அடிப்படைகளில் விளக்குக.

(i) பதி உண்மை

(ii) பதியின் சொரூப லக்கணம்

(iii) பதியின் தடத்த லக்கணம்

(20 புள்ளிகள்)

**3.** தமிழ்நாட்டில் தருமபுர ஆதீனம் ஆற்றிவரும் பணிகளை மேல்வரும் தலைப்புகளில் விளக்குக.

(i) சமயப் பணி

(ii) கல்விப் பணி

(iii) சமூகப் பணி

(20 புள்ளிகள்)

**4.** சோழர் காலத்தில் சைவசமயம் சிறந்து விளங்கியதை மேல்வரும் தலைப்புகளில் ஆராய்க.

(i) சிவன் கோயில்கள்

(ii) சிற்பங்களும் ஓவியங்களும்

(iii) சைவ இலக்கியங்கள்

(20 புள்ளிகள்)

**5.** மேல்வருவனவற்றுள் எவையேனும் **நான்கிற்குக்** குறிப்புகள் எழுதுக.

(i) காஷ்மீர சைவம்

(ii) திருவாசகம்

(iii) திருக்கேதீச்சரம்

(iv) யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபை

(v) மலேசியாவில் சைவம்

(20 புள்ளிகள்)

### பகுதி III

**6.** சங்க காலத்தில் நிலவிய சைவசமயம் பற்றி ஆராய்க. (20 புள்ளிகள்)

**7.** சைவசமயம் சிவாகமங்களை அடிப்படையாகக் கொண்டு வளர்ச்சி பெற்றவாற்றை ஆராய்க. (20 புள்ளிகள்)

**8.** சைவம் கூறும் மனித விழுமியங்களை விபரிக்குக. (20 புள்ளிகள்)

**9.** தென்கிழக்காசியாவில் விளங்கும் சைவப் பண்பாடு பற்றி விளக்குக. (20 புள்ளிகள்)

* * *

සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

இந்து தர்மாசிரியர் பரீட்சை - 2015 (2017)

Hindu Dharmaciriyar Examination - 2015 (2017)

**(04) பன்னிரு திருமுறைகள்**

The Twelve Thirumurais

II ஆம், III ஆம் பகுதிகளுக்கான விடைகளை உமக்குத் தரப்படும் **விடைத்தாளில்** எழுதிப் **பகுதி I** இன் விடைத்தாளுடன் இணைத்து மேற்பார்வையாளரிடம் கையளிக்குக. ஒவ்வொரு பகுதியிலிருந்தும் **இவ்விரண்டு** வினாக்களைத் தெரிவு செய்க.

## பகுதி II

**2.** "வளைக்கை மடநல்லார்" - திருமயிலைப் பதிகம்
- (i) விளக்கீடு குறித்த இப்பாடலை வரியமைப்புடன் எழுதுக.
- (ii) பாடலைப் பாடியவர் - தலம் - பண் என்பனவற்றைக் குறிப்பிடுக.
- (iii) கார்த்திகை தீபத்திருநாள் சிறப்பு பற்றி எழுதுக.
- (iv) "மட்டிட்ட புன்னை" பதிகம் தோன்றிய வரலாற்றைச் சுருக்கிக் கூறுக.

(20 புள்ளிகள்)

**3.** "நீளநினைந்தடியேன்" - சுந்தரர் ஏழாம் திருமுறை
- (i) பாடலை எழுதிப் பொருள் தருக.
- (ii) பாடல் பாடப்பெற்றதற்கான காரணத்தை சுருக்கமாகத் தருக.
- (iii) சுந்தரரின் இருமனைவியர் பெயர்களையும், அவர்களது பூர்வஜென்மப் பெயர்களையும் குறிப்பிடுக.
- (iv) சுந்தரர் மண்ணுலகில் பிறக்கக் காரணம் என்ன?

(20 புள்ளிகள்)

**4.** "சொற்றுணை வேதியன்" - திருநாவுக்கரசர்
- (i) இப்பதிகத்தின் சிறப்புப் பெயர் யாது? பண் யாது?
- (ii) பஞ்சாட்சர மந்திரத்தை எழுதுக.
- (iii) சூக்கும பஞ்சாட்சரம் அமைந்த திருவாசகப் பாடலை எழுதுக.
- (iv) மேற்கூறிய திருப்பதிகம் பாடப்பெற்ற சந்தர்ப்பத்தைச் சுருக்கமாக எழுதுக.

(20 புள்ளிகள்)

**5.** "ஆரார் வந்தார் அமரர் குழாத்தில்" - திருப்பல்லாண்டு
- (i) இப்பாடல் குறித்து நிற்கும் திருவிழா - விழாநாயகன், நாயகனின் நட்சத்திரம் பற்றிக் குறிப்பிடுக.
- (ii) தில்லையில் இத்திருவிழாக் காண வந்த தேவர்கள் யாவர்?
- (iii) திருப்பல்லாண்டில் உள்ள பாடல்கள் எத்தனை? திருப்பல்லாண்டு பாடியவேளையில் தில்லையில் நடந்த அதிசயம் என்ன?
- (iv) பல்லாண்டு பாடிய சைவ - வைணவ அடியார்கள் யாவர்?

(20 புள்ளிகள்)

## பகுதி III

**6.** திருமுருகாற்றுப்படை காட்டும் சீரலைவாய்ச் சிறப்புப் பற்றிக் கூறுக. (20 புள்ளிகள்)

**7.** பக்தியின் உச்சத்தைத் தொட்ட சிறுத்தொண்டர் செயல் பற்றி ஆராய்க. (20 புள்ளிகள்)

**8.** தேவாரப் பண்ணிசையில் இராஜராஜனின் வகிபாகம் எத்தகையது? (20 புள்ளிகள்)

**9.** மேல்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டிற்கு** சிறுகுறிப்பு எழுதுக.
- (i) சேரமான் பெருமாள்
- (ii) விறன் மிண்டர்
- (iii) சாக்கிய நாயனார்
- (iv) கலய நாயனார்
- (v) ஏனாதி நாயனார்

(20 புள்ளிகள்)

* * *

සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

## இந்து தர்மாசிரியர் பரீட்சை - 2015 (2017)
## Hindu Dharmaciriyar Examiantion - 2015 (2017)

### (05) கோயில்களும் கலைகளும்
### The Art and Architecture of the Hindu Temple

இப்பகுதிகளுக்கான விடைகளை உமக்குத் தரப்படும் **விடைத்தாளில்** எழுதிப் பகுதி I இன் விடைத்தாளுடன் இணைத்து மேற்பார்வையாளரிடம் கையளிக்குக.
ஒவ்வொரு பகுதியிலிருந்தும் **இவ்விரண்டு** வினாக்களைத் தெரிவு செய்க.

### பகுதி II

**2.** திராவிடக் கட்டடக் கலையின் வளர்ச்சியில் மேல்வரும் அமைப்புகள் பெறும் முக்கியத்துவத்தை விளக்குக.
- (i) அதிஷ்டானம் *(06 புள்ளிகள்)*
- (ii) விமானம் *(07 புள்ளிகள்)*
- (iii) கோபுரம் *(07 புள்ளிகள்)*

**3.** மேல்வரும் கடவுட் படிமங்களின் அம்சங்களைச் சுருக்கமாக விளக்குக.
- (i) அர்த்தநாரி *(06 புள்ளிகள்)*
- (ii) திரிபுராந்தகர் *(04 புள்ளிகள்)*
- (iii) காலாரி *(04 புள்ளிகள்)*
- (iv) கணபதி *(06 புள்ளிகள்)*

**4.** மேல்வருவனவற்றின் சிறப்புகளைச் சுருக்கமாக விளக்குக.
- (i) அஜந்தா ஓவியங்கள் *(10 புள்ளிகள்)*
- (ii) தஞ்சைப் பெருங்கோயில் ஓவியங்கள் *(05 புள்ளிகள்)*
- (iii) சித்தன்னவாசல் ஓவியங்கள் *(05 புள்ளிகள்)*

**5.** பரதநாட்டியத்தில் மேல்வருவனவற்றின் முக்கியத்துவத்தை விளக்குக.
- (i) அபிநயம் *(10 புள்ளிகள்)*
- (ii) தாளம், இராகம் *(06 புள்ளிகள்)*
- (iii) பாதசாரிகள் *(04 புள்ளிகள்)*

### பகுதி III

**6.** விஜயநகர - நாயக்கர் காலத்துக் கோயிற் கட்டடக் கலையின் சிறப்பான பண்புகளை விளக்குக. *(20 புள்ளிகள்)*

**7.** புராதன கால இந்திய சமுதாயத்தில் ஓவியங்களை வரையும் முறைகளையும் அவற்றின் பயன்பாடுகளையும் ஆராய்க. *(20 புள்ளிகள்)*

**8.** "பரதநாட்டிய சாஸ்திரம் இந்திய நுண்கலைக் கோட்பாடுகளின் களஞ்சியமாகும்." இக்கூற்றினை ஆராய்க. *(20 புள்ளிகள்)*

**9.** மேல்வருவனவற்றுள் எவையேனும் **நான்கினைப்** பற்றிச் சுருக்கமான குறிப்புகள் எழுதுக.
- (i) ஐஹொளே
- (ii) பல்லவர் காலச் சிற்பங்கள்
- (iii) திரிபுவன வீரேஸ்வரம்
- (iv) மகரிகள்
- (v) குச்சுப்புடி நடனம்
- (vi) ராசபுத்திரர் ஓவியங்கள்
- (vii) ஐந்தாம் சிவாலயம் - பொலன்நறுவை
- (viii) சண்டேஸ்வரர் படிமங்கள்

*(05 × 04 = 20 புள்ளிகள்)*

***